# புறநானூற்றில் வாழ்வியல்

**முனைவர் க. இரவி**
உதவிப்பேராசிரியர், தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்

புறத்தினை பெரும்பாலும் ஆண்களைச் சார்ந்தே அமைந்துள்ளது என்று கருதும் போக்கு நிலவினாலும், புறத்திணையில் மகளிரின் செயற்பாடுகளும் இணைந்துள்ளன என்பதை ஆய்வறிஞர் சுட்டியுள்ளனர். இதனால் புறத்திணையில் மகளிர் பற்றிய ஆய்வு அத்தியாவசியமாகின்றது. அவ்வகையில் புற இலக்கியமாகத் திகழும் புறநானூற்றில் இடம்பெற்றுள்ள மகளிர் பற்றியும் அம்மகளிரது செயல்பாடுகள் குறித்தும் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** II

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

**புறத்திணையில் ஆண்கள்**

புறப்பொருள் பெரிதும் ஆடவரையே சார்ந்தமைந்துள்ளது. புறம் என்னும் போது போர்நிகழ்வே பெருபான்மையாகக் குறிக்கப்படுவதால் ஆடவர்களின் பங்கு புறவாழ்வில் அதிகமாக இடம்பெற்றுள்ளது. இருப்பினும், புறவாழ்வில் பெண்களின் பங்கும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனை,

‘‘மனித வாழ்வை அகம் புறம் என இரண்டாகப் பகுத்தனர். அகவாழ்வின் உரிமை மனைவிக்கு என்றும், புறவாழ்வின் உரிமை கணவனுக்கு என்றும் வகுத்தனர். புறவாழ்க்கைக்கு வலிமையான உடல்தேவை. ஆதலால் அவ்வாழ்க்கையை ஆடவர்க்கு என வகுத்தனர். மென்மையான உடல்வாய்ந்த பெண்டிர்க்கு அகவாழ்க்கையை உரிமையாக்கினர். உரிமை என்பன தலைமையுரிமையே ஆகும். அகவாழ்வின் தலைமையுரிமையை மனைவியும், புறவாழ்வின் தலைமையுரிமையைக் கணவனும் பெற்றனர். இவ்வுரிமைகள் மரபுவழி வந்தவையாகும்’’[1] என்று குறிப்பிடுவர்.

மகளிரின் செயல்கள் பற்றிக்கூறும் துறையிலமைந்த பாடல்கள் சில உள்ளன. அவை ஐந்து பாடல்களில் இருப்பத்தியிரண்டு துறைகளில் மகளிர் தம் செயல்பாடுகள் புலப்படுகின்றனவாக உள்ளன. காஞ்சிப்படலத்தின் ஆஞ்சிக்காஞ்சியில்,

**“தாங்கிய கேளொடு தானு மெரிபுகப்**
**பூங்கழை யாயம் புலர்கென்னும் – நீங்கள்**
**புலாழித் தலைக்கொண்ட புண்”[2]**

என்று மேற்கோள் நூற்பாவினால் மகளிரின் வீரச்செயல் புலப்படுத்தப்படுகின்றது.

தும்பைப்படலத்தில் சிருங்கார நிலை, வலகைக்கலுழச்சி, தன்னை வேட்டல் போன்ற துறைகளிலும், பாடான் படலத்தில் விறலியாற்றுப்படை, வள்ளி, கைக்கிளை, பெருந்திணை, புலவிப்பொருளாகத் தோன்றிய பாடாண்பாடு, குழுவின்கண் தோன்றிய காமப்பகுதி போன்ற துறைகளிலும் மகளிரின் இன்பதுன்ப உணர்வுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

காதல் நிலைக்களவில் தோன்றும் இன்ப உணர்வை வெளிப்படுத்தும் துறைகள் பாடாண்திணையின் உள்ளன. பாடாண் படலத்துள் மகளிர் தொடர்பாய் உள்ள துறைகள் எட்டனுள் விறலியாற்றுப்படை நீங்கலாக உள்ள பிற ஏழும் பெண்டிரின் காதல் உணர்வைப் புலப்படுத்துவன. இவற்றுள் கடவுள் மாட்டுக்காதலையும், மானிடக் காதலையும் பிரித்துணரலாம். பெண்களின் இன்ப உணர்வானது,

**"அரிகொண்ட கண்சிவப்ப வல்லிணென் னாகம்**
**புரிகொண்ட நூல்வடுவாப் புல்லி – வரிவண்டு**
**கூட்டுண் டானூர்"[3]**

என்ற மேற்கோள் பாடலின் மூலம் பெண்களின் இன்ப உணர்வை உணரமுடிகின்றது.

துன்ப உணர்வுகளை வெளிப்படுத்தும் துறைகள் ஏழு. இவற்றில் போரில் இறந்த மனைவி உடன்கட்டை ஏறுதலும், கைம்மை நோன்பு நோற்றலும், வருந்தி அழுதலும் பற்றி துயர்நிலைகள் பொருள் அமைந்துள்ளன. கணவனோடு மனைவியும் உயிர்நீங்கும் ஆஞ்சிக்காஞ்சி என்ற காஞ்சித் திணையிலும், முதுப்பாலை முதலான ஆறும் சிறப்பிற் பொதுவியலிலும் வெண்பாமாலையில் இடம்பெற்றுள்ளன பெண்களின் துன்ப உணர்வினை,

**''நீர்மல கண்ணொடு நின்ற வாலையிரங்காய்**
**தார்மலி மார்பன் .......................................**
**....................................... கோடல் கொடியது"[4]**

என்ற நூற்பாவினால் அறியமுடிகின்றது. இப்பாடல்களில் ஆடவர்தம் வீரம் பாராட்டப் பெறுதலைவிட அவரால் பாதிப்பு பெறுகின்ற மகளிரின் மனநிலைகளே விஞ்சியுள்ளன.

**மகளிரின் வீர உணர்வு**

மகளிர் பிள்ளைப் பருவத்தாருக்காகக் கொடுக்கும் வீரஉணர்ச்சியே பின்னர் நாடு காக்கப் பயன்படுகின்றது. சமுதாயமானது தொடக்க காலத்தில் பெண்வழியில் அமைந்துள்ளது, பெண்கள் ஆற்றல் மிக்க ஆண்களையும் தன் வகைப்படுத்திருந்தனர். வீர உணர்வு பெண்ணிடமிருந்து ஆணிற்குக் கைமாறியபோது பெண்ணின் வீரம் ஆடவர்க்கு இன்றியமையாத விழுப்பொருளாயிற்று.

**''வந்த படைநோனாள் வாயின் முலையற்று**
**வெந்திற லெ.்.க மிறைக்கொளீஇ முந்தை**
**முதல்வர்கல் நான்காட்டி மூதில் மடவாள்**
**முதல்வனைச் செல்கொன்றாள் போக்கு"[5]**

என்ற நூற்பா இச்செய்தியை உறுதிப்படுத்துகின்றது.

புறத்திணைகளும் மூதின்முல்லை மனித இனம் தோன்றியபொழுது பெண்ணினம் பெற்றிருந்த வீரத்தின் செழுமையை வெளிபடுத்துகின்றது.

**மகளிரின் உரிமை**

தொன்மைக் காலந்தொட்டுத் தமிழ்ச் சமுதாயத்தில் பெண்கள் பெருஞ்செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்துள்ளனர்.

‘‘வேத காலத்தில் அதாவது கி.மு. 200ஆம் நூற்றாண்டில் ஆடவருக்கும் பெண்டிருக்கும் சமஉரிமை இருந்தது என்றும் சம சமுதாயக் கடமைகளில் கணவனும் மனைவியும் சமஉரிமை பெற்றிருந்தனர் என்றும், இவ்வுண்மை ரிக் வேதத்தின் 5ஆம் நூலில் 61ஆம் சுலோகப் பகுதி 8வது திண்மையாக விளக்கப்பட்டுள்ளது என்று பேராசிரியை இந்திரா கூறுகின்றார்”[6]

இதனால் ரிக்வேத காலத்துக்கு ஒப்பான சங்க காலத்தின் மகளிர் நிலை மிகவும் போற்றத்தக்கதாக விளங்கியது என்பது உயர்த்துணர முடிகின்றது. அக்காலத்தில் மகளிர்க்கும் தாம் விரும்பிக் கணவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையும் இருக்காது.

**“அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்”[7]**

என்ற தொல்காப்பிய நூற்பா இவ்வுண்மையை உணர்த்துகின்றது. தலைவனும் தலைவியும் அன்பொரு புணர்ந்த குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணை நிகழும் காமக்கூட்டம் என்பது அவ்வடியின் பொருள். பல்லாற்றானும் ஒத்த தலைவனும் தலைவியும் தற்செயலாய் எதிர்ப்பட்டு ஒருவரையொருவர் காதலித்து திருமணம் செய்துக்கொள்வர். இச்செய்தியைச் சங்க இலக்கிய அகப்பாடல்கள் பலவும் தெளிவுபடுத்துகின்றன.

### கற்பு

தொன்மைக் காலத் தமிழர் கற்பினை, இருத்தல் என்று கூற இயலும் கணவன் மனைவியாகிய இல்வாழ்வில் கணவன் பிரிந்திருந்த காலத்து அவன் வருமளவும் தன் உணர்வுகளை அடக்கி ஆற்றியிருந்தலே கற்பாகும் என்று கற்பு என்பதை வரையறை செய்கின்றார். செல்வராசு, இக்கருத்தைச் சங்க இலக்கியக் கற்புநிலையோடு இணைத்துப் பார்க்கும்போது ஆய்வுக்குரியதாக அமைகிறது.

பெண்கள் பெரும்பாலும் இல்லக்கடமைகளுக்கு உரியவர்களாகவே கருதப்பட்டனர். பெண்களின் தலைசிறந்த பண்புகளில் எல்லாம் சிறந்தது கற்பு, அதனைக் கற்பெனும் திண்மை என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். கற்புநிலை தவறாக பெண்களைவிட உலகில் வேறெதுவும் சிறந்தது இல்லை என்ற பொருள்பட.

**‘‘பெண்ணின் பெருத்தக்க யவுள கற்பென்னும்**
**திண்மை உண்டாகப் பெறின்”[1]**

என்று வலியுறுத்திக் கூறுகின்றார்.

**‘தன்னை மணந்த கணவனையன்றி மற்றொருவனை மனத்தால்**
**நினைப்பதும் கற்புக்கு இழுக்கு என்பது பழந்தமிழ்க்கொள்கை**
**கற்பு என்பது விரிந்த பொருளையுடையது”[9]**

என்று குறிப்பிடுகின்றார் அறிஞர் வ.சுப. மாணிக்கனார்.

### அகத்திணைக்கண் வரும் களவு

கற்பு என்பனவே இலக்கணக் குறியீடுகள் இவை பொதுவாக நாம் அறியும் பொருளோடு இன்றும் விரிந்த பொருளுடையவை. மணமும், மணத்திற்குப்பின் நிகழும் காதற்செயல்களும் கற்பின் பாற்படும். பண்பான் கற்பின் நினைகிளை முதலோர் (புறம் 163) என்னும் புறநானூற்றுத் தொடரில் கற்பென்னும் சொல்லின் பொருட்பரப்பை அறியலாம்.

தொல்காப்பியர் கூறும் மனைவிக்குரிய கற்பு முதலான பண்புகள் பெண்களுக்கே உரியன. எல்லாவற்றிலும் சிறந்ததாகிய உயிரைக் காட்டிலும் நாணம் சிறந்ததென்றும், அந்நாணத்தைவிட குற்றமற்ற கற்பு சிறந்ததென்றும் தொல்காப்பியர் நூற்பா குறிப்பிடுகின்றது.

**‘‘உயிரினும் சிறந்தன்று நாணே நாணினுக்கு**
**செயிர்தீர் காட்சிக் கற்புக் சிறந்தன்று”[10]**

பாண்டியன் களவந்திகைத் துஞ்சிய நன்மாறன் தமக்குப் பரிசில் கொடுக்கக் காலம் நீட்டித்தற்காக ஆவூர் மூலங்கிழார் மனம் நொந்து அவனை நோக்கி, என் தடியிலுள்ளோர் முன்பு காணாததை நான் உன்னிடம் கண்டேன் (அதாவது உன்னால் சிறுமையுற்றேன்) வெயிலென்று வெறுக்காமலும், பனியென்று வாளாஇராமலும், கல்போன்று, திண்ணிதாக இருக்கும் என் வறுமையினால் மெலிந்து என் மனையிடத்திருக்கும் நாணமல்லாது வேறொன்றும் தன்னிடத்து இல்லாத கற்புடைய என் மனைவியை நினைத்து செல்கின்றேன்.

**‘‘நின் ஆயுள் சிறப்பதாக”[11]**
என்று தம் மனைவியின் நிலையைக் குறிப்பிடுதல் அறியத்தகும். புறநானூற்றில் அருந்ததியை ஒக்கும் கற்புடைய மகளிர் நிலை பேசப்பட்டுள்ளது.

**‘‘செய்தீர் கற்பிற் சேயிழை**
**கற்புடைய மடந்தை**
**கடவுள் சான்ற கற்பின் சேயிழை**
**மறங்கடிந்த வருவங்கற்பு**
**நாணதில்லாக் கற்பு**
**பொறையொடு மலர்ந்த கற்பு”[12]**
போன்ற சொற்றொடர்கள் கற்பென்னும் திண்மையைப் பேசுகின்றன. இதனால், சங்ககால மகளிர் நாணினும், கற்பினும் சிறந்து மனையறத்தைப் பேணி மனைக்கு விளக்காகத் திகழ்ந்தனர் என்பதைப் புறநானூற்றுப் பாடல்கள் உணர்த்துகின்றன.

**பூச்சூடுதல்**

கணவன் தன்னைப் பிரிந்த காலத்தில் பெண்கள் தலையில் பூச்சூடுதல் வழக்கம் இல்லை என்பதனைப் புறப்பாடல் குறிபிடுகின்றது. புறமதிலை முற்றுகையிட்டிருக்கும் சிற்றரசர்களோடு போர் செய்யும் பொருட்டுக் காஞ்சிப்பூவைக் கொள்ளுதற்கு வருமாறு வள்ளுவன் யானையின் மீது அமர்ந்து தண்ணுமைப் பறையை ஒலிக்கிறான். அப்பறையைக் கேட்டவுடன் பூவைப்பெற்றுப் போர்க்களம் புகுவர். வீடுதோறும் பூவினை விற்கும் பெண் வரும்போது போர்ப்பறை கேட்கிறது. அப்பறை ஒலி கேட்டதும் வீட்டுலுள்ள ஆடவர் அனைவரும் போர்க்களம் சென்றுவிடுவாரகளின் வீட்டிலுள்ள மனைவியர் தம் கணவர் இல்லாதபோது பூவினை வாங்க மாட்டார்கள் எனப் பூ விற்கும் பெண் எண்ணிப்போய் விடுவதாக நொச்சிறியமங்கிழார் பாடுகின்றார். பூ விற்கும் பெண் விற்பதற்கு வாய்ப்பின்றி வறிதே மீண்டு போவதை,

**‘‘அளியின் தானே பூவிலைப் பெண்டே”[13]**
என்று புலவர் அவள் நிலைக்குப் பெரிதும் மனமிரங்கிக் கூறுகின்றார். சங்ககாலத்தின் பெண்கள் தங்கள் கணவனுக்காகவே தங்களை அழகுபடுத்திக் கொண்டனர் என்பது இதனால் புலனாகிறது.

**மன்னர் மாளிகையில் மகளிர்**

‘‘மன்னரிடம் வரும் இரவலர்க்கு அரண்மனையிலுள்ள மகளிர் மதுவை வழங்குவர். பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுடைய வெற்றிச் சிறப்பைப்பாடிய இரவலர்களுக்கு ஒள்ளிய வளையையுடைய மகளிர், பொற்காலத்துக்கு நறுநாற்றத்தையுடைய மதுவைக் கொடுத்ததாக மாங்குடிகிழார் பாடுகின்றார்.’’[14]

**“யவணர் நல்ல குப்பில் கொண்டுவந்த குளிர்ந்த நறு நாற்றத்தையுடைய**
**தேறலை, ஒளிய வளையையுடைய மகளிரால் பொற்காலத்தில்**
**இவர்களுக்குக் கொடுத்து உண்ணச்செய்து மகிழ்ந்திருப்பாயாக’’[15]**
என்று இளவந்திகைப் பள்ளிக்கஞ்சிய நன்மாறனை நக்கீனரார் அறிவுறுத்தினார்.

**“வெற்றிச் சிறப்பைப் பாடிய பாணனுக்கும், பாடினிக்கும்**
**காலங்காலான கள்ளைப் பொன் வள்ளத்தில் பொறுமைக்**
**குணங்களால் நிறைந்த மகளிர் ஊற்றிக் கொடுத்தனர்”16**
**“மகளிர் ஆராய்ந்த கலத்திற் தெளிவான கள்ளை**
**உண்ணுமாறு அரசர்களுக்குக் கொடுத்ததாகக் கோமெனார் குறிப்பிடுகின்றார்”[17]**

நாராய் வடித்துத் தெளிவான கள்ளைப் பொன் வள்ளங்களில் ஊற்றிப் பசிய இழையணிந்து மகளிர் அரசர்களுக்கு கொடுத்தனர் என்பதை,

**“பாசிழை மகளிர் பொலங்கலத் தேந்திய**
**நாரரி தேறன் மாந்தி மகிழ்சிறந்த**
**திரவலர்க் கருங்கல மருகாது வீசி”[18]**
என்னும் புறப்பாடல் சுட்டுகின்றது.

**மனைவியரால் கணவருக்குச் சிறப்பு**

சங்ககாலப் புலவர்கள் ஒரு தலைவனை விளங்குங்கால் அவன் மனைவியின் சிறப்புக்களை அடைமொழிகளாக அமைத்துப் பாடியிருப்பது நோக்குதற்குரியதாகும்.

**“செயிர்தீற் கற்பின் சேயிழை”[19]**
என்ற புறப்பாடலில், இரும்பிடர்த்தலையார் பாண்டியன் கருங்கையொள்வாட் பெரும்பெயர் வழுதியை அவன் மனைவியின் கற்பின் சிறப்பைக் குறிப்பிட்டு விளிக்கிறார். இவ்வாறே ஏனைய சங்கப் பாடல்கள் பலவற்றில் மனைவியின் சிறப்பியல்பு கணவனுக்கு அடைமொழிகளாக அமைந்துள்ளன.

**‘ஒடுங்கீ ரோதிக் கொடுங்கழை கணவ”[20]**
**“ஆன்றோன் கணவு”**
**“பாவையன்ன நல்லோள் கணவு”**
**“புரையோள் கணவு”**
**“மங்கையர் கணவு”**
**“மலர்போன் மழைக்கண் மங்கையர் கணவன்”[21]**
போன்ற தொடர்களில் இதனைக் காணலாம்.

**பரத்தையர்**

தொன்மைத் தமிழகத்தில் பரத்தமையும், பரத்தமை நாட்டமும் மிகுந்து விளங்கின என்பதற்கான இலக்கிய சான்றுகள் கிடைக்கின்றன. தந்தை வழிச்சமுதாயம் உருவாகிய காலத்தில் கற்பு வலியுறுத்தப்பெற பரத்தமை உருவானது எனலாம்.

சங்ககாலச் சமுதாயத்தில் மகளிருள் பொதுமகளிர் இருந்தனர் என்பது சங்க இலக்கியங்களிலிருந்து அறியமுடிகின்றது. இவர்களைப் பொதுமகளிர் என்றும் பரத்தையர் என்றும், பொருட்பெண்டிர் என்றும் கூறுவர். பொருளுக்காகத் தன் நலத்தைப் பிறருக்கு நல்குவராதலின் இவர் பொருட்பெண்டிர் எனப்பட்டிருக்கலாம்.

தலைவன் பரத்தையர் பொருட்டுப் பிரிவதன் காரணமாகத் தலைவி தலைவன்பால் ஊடல்கொள்வது மருதத்திணையின் ஒழுக்கமாகத் தொல்காப்பியம் கூறுகின்றது. சங்க அகப்பாடல்களில் மருதத்திணைப் பாடல்கள் அனைத்தும் தவைலனின் பரத்தையர் பிரிவு பற்றியும், அதன் காரணமாக ஏற்படும் தலைவியின் ஊடல் பற்றியும் விளக்குகின்றன. பரத்தையர் ஒழுக்கம் இழிவானது என்று அக்காலச் சமுதாயம் கருதினும், சங்க இலக்கியங்கள் அவ்வொழுக்கத்தைப் பல பாடல்களில் பாடியிருப்பது ஆழ்ந்து சிந்தித்தற்குரியதாகும்.

‘ஓர் இலக்கியத்தை ஆராயம்போது அவ்விலக்கியம் தோன்றிய காலத்தின் சமுதாய நிலை, பழக்கவழக்கங்கள் வரலாறு இன்னோர்ன்னவைகளை ஒட்டி ஆராய்தல் வேண்டும்”[28]
என்று தா.ஏ. ஞானமூர்த்தி கூறுகின்றார். இதன்படி நோக்கும்போது சங்ககாலத்தின் பேரரசர்கள், சிற்றரசர்கள், குறுநில மன்னர்கள் ஆகியோர்களுக்கிடையே அடிக்கடி போர்கள் நிகழ்ந்தமையால் ஆடவர் தொகை குறைந்தது. பெண்டிர் தொகை மிகுதியாயிற்று.

சங்ககாலத்தில் ஒருவன் ஒருத்தியைத் திருமணம் செய்துகொள்ளும் முறையே வழக்கில் இருந்துவந்தது. இதனால் திருமணம் செய்துக்கொள்ள வாய்ப்பற்ற மகளிர் பரத்தையர் உண்டாகும் நிலை ஏற்பட்டிருக்கலாம் என்று குறிப்பிடுவர்.

சங்க இலக்கிய பாடல்களில் பரத்தையரைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ள இயலவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். சங்க இலக்கியப் பரத்தையர் தலைவன், தலைவியரின் ஊடலுக்குப் பின்னனியாகவே சித்தரிக்கப்பட்டுள்ளனர். பரத்தை என்ற சொல் 13 இடங்களிலும், பரத்தமை என்ற சொல் ஒரே ஒரு இடத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

சங்க இலக்கியத்தில் தொழில் நுணுக்கமுறையில் அமையும் பரத்தையர் அமைப்பு காணப்பெறவில்லை. ஆனால், பரத்தையர் சேரிமட்டும் இருந்திருக்கின்றது. சேரி என்னம் சொல் குறிப்பாக சேர்ந்து வாழும் இடத்தைக் குறித்துள்ளது. பரத்தையர் ஒரு குழுவாகத் தங்கியிருந்த பகுதியே பரத்தையர் சேரி என்று வழங்கப்பட்டுள்ளது. இதனால் பரத்தையர் தங்களுக்குள் ஒரு தனி இடத்தை அமைத்து கொண்டு வாழ்ந்தனர் என்பது புலினாகின்றது.

மார்க்கண்டேயனார் என்று புலவர் உலக நிலையாமையைப் பற்றிப் பாடுங்கால், ‘‘முன்பு ஆண்ட வலிமை மிக்க அரசர்கள் போரிட்டுவிண்ணுலகம் அடையனும், யான் விலைமகளிரின் பலரை இடித்துக் கூறுவதைப் போல என்னையும் இழிவாக இடித்துக்கூறும் வண்ணம் உயிரோடு இருக்கின்றேனே என்று பலகாலம் நிலமகள் அழுகின்றாள்”[27] என்றுரைக்கின்றார்.

‘‘மெல்ல வந்து என் அடியை அடைந்து தமக்கு ஈயவேண்டுமென்று வணங்கி இரப்பார்களாயின் என் அரசாட்சியை அவர்களுக்குக் கொடுப்பேன். இனிய என் உயிரையும் கொடுப்பேன். ஆனால் என் ஆற்றலைப் போற்றாது பகைவர் என்னை இகழ்வாரயின் அவர்கள் பிழைப்பது அரிது. அவர்கள் மேல் படையெடுத்துச் சென்று அவர்கள் வருந்துமாறு போர்செய்து போவேனாயின் தம் நெஞ்சத்தில் காதல் கொள்ளாத பொதுப் பெண்டிரைத் தழவியனாவேன்”[20] என்று சோழன் நலங்கிள்ளி உரைக்கின்றார். இதனால் பொதுப் பெண்டிரைத் தழுவுவது மிகவும் தீமை என்பதை இப்பாடல் நன்கு தெளிவுபடுத்துகின்றது.

**சங்ககால மகளிர் தொழில்கள்**

சங்ககால மகளிர் தம் வாழ்க்கைக்குத் தேவையானதைத் தம்மிடத்துள்ள பொருட்களை அவை தேவைப்படும். பிறர்க்கும் கொடுத்தும், தம்மிடத்திலில்லாத பொருட்களைப் பிறரிடத்திலிருந்து பெற்றும் வாழ்ந்துள்ளனர். குடும்ப மகளிரின் இந்தக் கொள்வினை கொடுப்பினையில் தொடங்கி நாளடைவில் இந்நிலை பிற்காலத்தில் வணிக இயல் வல்லுநர் பண்டமாற்று என்று சிறப்பிக்கும் முறைக்கும் அடிதளமாய் அமைந்தது சங்ககாலத்தில் மக்கள் திணையடிப்படையில் பகுக்கப்பட்டு அவர்கள் திணை அமைந்துள்ள முறையில் தங்கள் தொழில்களை வகுத்துக் கொண்டனர். இதனால் அவர்கள் செய்தொழிலின் அடிப்படையில் அமைந்திருந்தனர். அதன் அடிப்படையில் பெண்டிர் மேற்கொண்ட தொழில்களும் அமைந்திருந்தன.

**கொடிச்சியர்**

குறிஞ்சி நிலத்தைச் சார்ந்த பெண்கள் கொடிச்சியர் எனப்பட்டனர். காவலின் பொருட்டுத் திணைப்புனத்தில அமைக்கப்பட்ட பரண்மீதிருந்து திணையை உண்ணவரும் பறவைகளைக்

கவண்வீசியும், தட்டை தட்டியும் ஓட்டிக் காத்தனர். மகளிர் திணைப்புனம் காக்கும் செய்தி கூறும் சங்க நூற்பகுதிகள் மிகுதியும் உள்ளன. இச்செய்திகளை,

**‘‘தழலை வாங்கியும் தட்டையும் ஓம்பியும்**
**குறமகள் காக்கும் ஏனல்**
**படுகிளி கடியும் கொடிச்சி கைக்குளிரே**
**உண்கிளி கடியும் கொடிச்சி மைக்குளிரே’’[28]**

எனவரும் செய்யுட்பகுதிகளில் காணலாம்.

**முடிவுகள்**

அகவாழ்க்கையிலும், புறவாழ்க்கையிலும் பெண்களின் பங்கு என்பது சரிபாதியாக இடம்பெற்றுள்ளது என்பது இக்கட்டுரை மூலம் தெரியவருகின்றது.

புறநானூற்றில் மகளிர் செயல்பாடு வீரவுணர்வும், குடும்பம் பேணல், நாட்டுக்காகப் புதல்வரைப் பெறுதல் முதலான செய்திகள் இடம்பெற்றுள்ளன.

பெண்கள் பற்றிய கருத்தாக்கத்தில் கற்பு என்பது முதன்மையானதாகக் கருதப்படுகின்றது. நாணைவிடக் கற்பே உயர்வானதாகக் கருதப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பெண்டிர் மன்னர் அவையிலும், மாளிகைகளிலும், பணிப்பெண்களாக பணியாற்றியமை புலப்படுகின்றது. மன்னனின் பெருமைகள் சிறப்பித்துச் சொல்லும் போது அவன் மனைவியின் சிறப்பையும் சேர்த்துச் சொல்லும் போக்கையும் காணமுடிகின்றது.

பரத்தையர் பற்றிய குறிப்புக்களும் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளன. ஆடவர் செய்தொழிலின் அடிப்படையில் புரிந்திருந்தைப் போலவே அவர்களுக்குத் துணையாகப் பெண்களும் சிலதொழிலில் உதவிபுரிந்து வந்தமையும் பலனாகின்றது.

மேலும், பண்டையக்கால மக்களின் நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் நிமித்தம் பார்த்தலும் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளன என்பது இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

**சான்றெண் குறிப்புகள்**

1. செந்துறைமுத்து, தமிழர் மரபுகள், ப. 85.
2. புறப்பொருள் வெண்பாமாலை, ப. 94.
3. மேலது., ப. 241.
4. மேலது., ப. 184
5. மேலது., ப. 184.
6. Prof. Indira> The Social Status of Women> p. 2.
7. தொல்காப்பியம், பொருளதிகாரம், களவியல், நூ. 1.
8. திருக்குறள், 155.
9. மாணிக்கனார், வ.சுப. தமிழ்க்காதல், ப. 35.
10. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூ. 22.
11. புறநானூறு, பா. 194.
12. புறநானூறு, பா. 3, 383, 198, 166, 196, 361.
13. புறநானூறு, பா. 293.
14. மேலது, பா. 24.
15. மேலது., பா. 56.
16. மேலது., பா. 14.

17. மேலது., பா. 366.
18. மேலது., பா. 367.
19. மேலது., பா. 3.
20. பதிற்றுப்பத்து, பா. 14.
21. மேலது., பா. 55.
22. மேலது., பா. 61.
23. மேலது., பா. 70.
24. மலைபடுகடாம், ப. 70.
25. திருமுருகாற்றுப்படை, ப. 58.
26. ஞானமூர்த்தி, தா. ஏ., நின்றசொல்லர், ப. 125.
27. புறநானூறு, பா. 33.
28. அகநானூறு, பா. 118.